## டிக்வெல்ல பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 நவம்பர் 25 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 மார்ச் 31 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு டிக்வெல்ல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) ஒன்றுக்கொன்று சமனாக வேண்டிய மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் மூலம் பங்களிப்புச் செலுத்தும் கணக்கின் மீதி மற்றும் நிலையான சொத்துக்களின் மீதி ஆகியவற்றிற்கிடையில் ரூபா 200,000 வித்தியாசம் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டில் அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் ரூபா 306,290 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது வரி மற்றும் குத்தகை வருமானம் ரூபா 447,539 வும், வாடகை வருமானம் ரூபா 367,636 வும் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கப்பட்டுள்ள 05 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதி மற்றும் அது தொடர்பான பட்டோலைகளில் காட்டப்பட்ட மீதிகளுக்கு இடையே கூட்டுத்தொகை ரூபா 317,589,827 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

03 வருட காலத்தை விஞ்சிய ரூபா 386,036 வான பெற வேண்டிய 03 கணக்கு மீதிகளும், ரூபா 7,188,805 வான வைப்பு மீதி 345 நிலவிய போதிலும், அம் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 159,690,373 வான நிலையான சொத்துக்களில் மீதிகள் 02 மற்றும் ரூபா 214,063,842 வான பொறுப்பு மீதிகள் 02 தொடர்பாக போதுமான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது அவை திருப்திகரமாக பரிசீலனை செய்ய முடியாமல் இருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 132 (ஓ) பிரிவின் பிரகாரம் அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரம் பெறப்படாமல் மீளாய்வாண்டில் விழா ஏற்பாடுகளுக்காக ரூபா 149,985 செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2002 நவம்பர் 28 திகதிய இலக்கம் ஐஏஜ/2002/02 கொண்ட திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 3,045,727 வான கணனிகள் ,உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,227,667 வான போதிலும், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,248,182 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நிதி விளைவில் ரூபா 17,979,485 ஆன வளர்ச்சி காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளுள் சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம், சுய சம்பாதிப்பு வருமானம் மற்றும் வருமான உதவி போன்று மொத்த மீண்டுவரும் செலவு தொடர்பான சுருக்கமான விபரமொன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வருடம் | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான உதவி | சுய சம்பாதிப்பு வருமானம் | மொத்த மீண்டுவரும் செலவு | சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 81,720,168 | 38,658,319 | 43,061,849 | 61,492,501 | (18,430,652) |
| 2014 | 49,361,315 | 25,028,320 | 24,332,995 | 47,113,133 | (22,780,138) |
| 2013 | 38,907,459 | 15,626,488 | 23,280,971 | 38,280,119 | (14,999,148) |

இது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுக்குள் சபையின் வருமான உதவிகளில் போன்று மீளாய்வாண்டு சுய சம்பாதிப்பு வருமானங்களிலும் கணிசமான வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையில் சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சிய மூன்று வருடங்களிலும் கணிசமான உயர் பெருமானங்களால் மீண்டுவரும் செலவு அதிகறித்து இருந்த போதிலும், அந் நிலமையை கட்டுப்படுத்திக் கொள்வதன் மீது சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) வருமான உதவி கிடைக்கபெறாவிடின் சுய சம்பாதிப்பு வருமானத்தினால் எவ்விதத்திலும் மீண்டுவரும் செலவினத்தை மீள் நிரப்பிக்கொள்ளமுடியாத நிலைமை காட்டப்படுகிறது.

(ஈ) மேல் குறிப்பிடப்பட்ட இலக்கம் (அ) தொடக்கம் (ஈ) வரையான பந்திகளில் குறிப்பிடப்படும் விடயங்களின் பிரகாரம் வருமான நிலைமையை உயர்துவதற்கு சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது எனவும், அதற்காக முறையான வேலைதிட்டமொன்று தயாறிக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட வேண்டும் எனவும், அவ்வாறு செய்யப்படாத போது சபையின் நிதி முகாமை தொடர்பாக நிலவும் பலவீனம் காரணமாக சிக்கலான நிலைமை உருவாக கூடும் எனவும் அதன் ஊடாக தொடர்ந்து நிலைத்திருப்பது தொடர்பில் பாதகமான தாக்கம் ஏற்பட முடியும் எனவும் அவதானிக்கப்பட்டன.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வீத வரி

மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 2,599,127 தொகையான நிலுவை வீத வரி அறவிடப்படுவதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை.

### 2.3.2 வாடகை

மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 1,742,768 தொகையான நிலுவை வாடகை மீதி நிலவிய போதிலும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 159(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை.

### 2.3.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2015 திசெம்பர் 31 திகதியில் நீதி மன்றத் தண்டப் பணமாக ரூபா 755,829 மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 32.038,429 பெற வேண்டியதாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல்

### 3.1.1 ஆலோசணைகள் நடைமுறைபடுத்தலின் முன்னேற்றம்

மீளாய்வாண்டிக்காக சபை நிதியத்திணை பயன்படுத்தி செயற்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த 62 வேலை திட்டங்கள் நடைமுறைபடுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.1.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

மீளாய்வாண்டின் கிரயம் ரூபா 33,302,447 வான 57 மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டினுள் அவற்றின் 17 கைதொழில்கள் மாத்திரம் நடைமுறைபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

### 3.2.1 மனித வள முகாமைத்துவம்

மீளாய்வாண்டு இறுதியில் பதவியணியினரில் 06 வெற்றிடங்கள் மற்றும் 25 மிகை எண்ணிக்கை இருந்த போதிலும், வெற்றிடங்களை நிரப்புவதற்கான அல்லது மிகை எண்ணிக்கையை முறையாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.2 ஊழியர் கடன்

மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 8,575,674 தொகையான ஊழியர் கடன் மீதியினுள் 07 வருட காலத்திற்கு மேலான காலத்தில் இருந்து அறவிடப்படாமல் நிலவிய மொத்தம் ரூபா 56,623 வான 02 மீதிகள் உள்ளடங்கப்பட்டிருந்தன.

# 4. கணக்களிப்பொறுப்பும் நள்ளாளுமையும்

## 4.1 பாதீட்டு கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டில் உள்ளடங்கப்பட்டுள்ள 04 செலவின விடயங்களின் தொகை ரூபா 1,239,110 வான சேமிப்பு காணப்பட்டதுடன், இன்னும் 04 செலவின விடயங்களின் தொகை ரூபா 13,902,161 வான நிதியேற்பாட்டின் எல்லை விஞ்சல் காணப்பட்டது.

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 யூன் 09 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிருவப்படுவதற்கு மீளாய்வாண்டில் இறுதி வரை நடவடிகக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

சபைக்கு உரித்தான கிரயம் ரூபா 2,000,000 வான லொறி வண்டியொன்று மற்றும் ரூபா 425,000 வான டக்டர் ஒன்றும் 2015 வருடத்தில் இருந்து செயலிலந்து காணப்பட்டதுடன், உள்ளுராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சிலிருந்து 2015 பெப்ரவரி 07 ஆம் திகதி பரிசாக கிடைக்கப்பெற்றிருந்த பாதை நெறிக்கி குறைப்பயன்பாட்டிற்குட்பட்டிருந்தது.

**5.** **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு.

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு.

(இ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு.

(ஈ) பதவியணியினர்.

(உ) முகாமைத்துவம்.